மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வில்லுப்பாட்டு வாசிக்கின்றவர்கள் விலக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பரிசு பெற்றிருக்கிறார்களா என்கிற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, தாரை தப்பட்டை போன்ற வாத்தியக்காரர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக் கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கவின்கலைகள்— ஃபைன் ஆர்ட்ஸ் என்ற பிரிவின் கீழ் அவை வருவதில்லை. கவின் கலைகள் என்ற தலைப்பின் கீழ் வருபவைகள் தான் இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : வில்லுப்பாட்டில் சிறந்த பிச்சைக் குட்டி என்பவர் காலமாகிவிட்டார். அவரது குடும்பத்திற்கு உதவித்தொகை அளிக்க அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவரது குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் சங்கீத நாடக சங்கத்திற்கு விண்ணப் பித்துக்கொண்டால் அதுபற்றி பரிசீலிப்பார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : தமிழ்நாட்டின் சிறந்த கலையாகிய தெருக் கூத்து, பொம்மலாட்டம் போன்றவைகள் அருகி வருகின்றன. அவற்றின் வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிக்க இந்தப் பரிசுத் திட்டத் தின் கீழ் அவர்கள் கொண்டுவரப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கலை வல்லு நர்களுக்கும் பரிசு வழங்குவதில் தடை இருக்காது என்று நினைக் கிறேன். சங்கீத நாடக சங்கத்தினர் அவர்களைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இசைக் கலைஞர் களுக்குப் பரிசுகள் வழங்குகிறபோது, அதற்காக தமிழக அரசால் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ? மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கித் தருகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுகளின் முழுப் பொறுப்பையும் தமிழக அரசுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பரிசு பெறுபவர்களுக்கு இரண்டு சவரன் பதக்கமும், 'கலாசிகாமணி' என்ற பட்டமும், ஒரு பட்டாடை போர்த்தலும் நடைபெறுகிறது.

திண்டுக்கல் அரசினர் பெண்கள் கலைக்கல்லூரி.

* 78 வினு—திரு. ஓ. என். சுந்தரம் : மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திண்டுக்கல் நகர் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியை தற்போதுள்ள சந்தடி மிக்க இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் உண்டோ?

1971 ஜூன் 29]

(இ) ஆம் எனில், எந்த இடத்திற்கு, எப்போது மாற்றப் படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கட்டிடம் கட்டியபின் கல்லூரி தற்போதுள்ள இடத்தி லிருந்து குறும்பப்பட்டி கிராமத்திற்கு மாற்றப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற இடம் அசௌகரியமாக இருக்கின்ற காரணத்தினால், துரிதமாக மாற்றுவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது திண்டுக்கல் நகரின் மத்திய பகுதியில் தற்காலிகமான கட்டிடத்தில் இந்தப் பெண்கள் கலைக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்போது கல்லூரி நடக்கிற இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள குறும்பப்பட்டி என்ற கிராமத்தில் கல்லூரிக்காக 40 ஏக்கர் நிலம் பெறப்பட்டிருக்கிறது. 'அங்கு விலாஸ்' உரிமையாளர் திரு. முத்தையாப்பிள்ளை அவர்கள் குமாரர் திரு. எம். அங்கமுத்து அவர்கள் இந்தக் கல்லூரிக்காக 40 ஏக்கர் நிலமும் ஒரு லட்சம் ரூபாயும் வழங்கியுள்ளார். 21—4—1971-ம் தேதி யன்று நிலம் பதிவு செய்யப்பட்டது. இப்போது கட்டடம் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு கல்லூரி புதிய கட்டடத்திற்கு மாற்றப் படும்.

திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியில் பட்டப் படிப்புக்கான பிரிவுகள் குறை வாக உள்ளன. இடங்களும் குறைவாக உள்ளன. அதனால் புகுமுக வகுப்பில் பயின்ற ஏழை மாணவர்கள் வேறு இடங்களுக்கு பட்டப் படிப்புக்காகச் செல்கின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் ஏழை மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பெண்கள் கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு படிப்பதற்கான பிரிவுகளை விரிவுபடுத்தி, மாணவர்கள் படிப்பதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்தித் தருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே இருக்கின்ற இடவசதியைப் பொறுத்துத்தான் பட்டப் படிப்புக்கான வசதியைச் செய்ய முடியும். புதிதாக கட்டடம் கட்டுகின்றபோது, தேவையான இட வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம். இப்போது இருக்கின்ற நிலைமையில் பல்கலைக் கழகத்தார் அதற்கு அனுமதி வழங்க மாட்டார்கள். புதிய கட்டடம் கட்டிய பிறகு அதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். மேலும், இந்த ஆண்டு பட்டப் படிப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்கிற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

[1971 ஜூன் 22

திரு. அ. சின்னசாமி : தலைவர் அவர்களே, புது கட்டடம் கல்லூரிக்காக கட்டப்படுகின்ற நேரத்தில் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் வீடுகள் அங்கே கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவா அவர்களே முதலில் கல்லூரிக்கான கட்டடம் வரட்டும், பிறகு ஆசிரியர்களைப் பற்றிக் கவனிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, குறும்பப் பட்டியில் கட்டடம் கட்டுவதற்காக பலரும் இன்றைக்கும் பணம் கொடுத்திருக்கிறார்கள். இடமும் கிடைத்துவிட்டது. அடுத்த ஆண்டுக்குள்ளாவது கட்டடம் கட்டி, கல்லூரி அங்கே ஆரம்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 21—4—1971-ம் தேதியன்று நிலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் முயற்சி எடுத்தால் அடுத்த ஆண்டு கல்லூரியை மாற்ற வேண்டுமென்று அரசு முயற்சி செய்து வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

* 79. வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் நடப்பு ஆண்டில் புதிய முறைகளைக் கையாள அரசு ஆலோசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து இந்த ஆண்டு பரிசிலனை செய்யப்பட்டு, புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதவர்கள் சிலர் நீதிமன்றத்திற்குச் செல்வது வாடிக்கையாக இருக்கிறது. இதைத் தவிர்க்கும் வகையில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான புதிய முறைகளை அரசு மேற்கொள்ளுமா ?

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரியில் இடம் பெறாத சில மாணவர்கள், ' மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் முறை தவறானது ' என்று கூறி நீதிமன்றத்திற்குச் சென்றனர். உயர்நீதி மன்றம், மாணவர்களைச் சேர்ப்பது, பொறுக்கியெடுப்பது போன்ற வேலைகள் நடைபெற்ற வரையில் முறையோடுதான் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டாலும், இன்னும் மாணவர்கள் சேர்க்கப் படுவது குறித்து முறையான சில நடவடிக்கைகளை மேற்கொள்ள லாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறது. அந்த ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து, இரண்டு முக்கியமான நட